எம்.சி.ஓ.பி. எண்: 1161/2022 தேதி : 19.1.2024

ம.சா. : 2

பெயர் : திரு. ஐயப்பன்

த/பெ. : திரு. வேணுகோபால்

வயது : 28

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

முதல் விசாரணை

நான் இந்த மனுவில் கண்ணுற்ற சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 9–ம் வகுப்பு படித்து விட்டு ITI பட்டியப்படிப்பு படித்துள்ளேன். நான் இந்த விபத்தை வழக்கமாக மாலை 5 மணியளவில் தேநீர் அருந்தி கொண்டிருக்கும் கடையின் அருகே வைத்து பார்த்தேன். நீங்கள் தான் திரு. ஐயப்பன் என்ற பெயர் கொண்ட நபர் என்பதற்கு பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் வசிப்பதற்கும் ஆதாரமாக ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து வழக்கு தொடர்பாக காவல் துறையின் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் எதையும் பெறவில்லை. இந்த விபத்து வழக்கில் பாதிக்கப்பட்டு இறந்து விட்ட எனது அண்ணன் குறித்து தொடரப்பட்ட வழக்கின் நிலை என்ன என்பதை நான் காவல் நிலையத்தில் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. அந்த வழக்கு உங்கள் அண்ணன் மீது தவறு இருப்பதாக சொல்லப்பட்டு அவர் இறந்து விட்டதால் குற்றம் அற்று விட்டதாக முடிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது. விபத்தை நேரில் பார்க்காமலும், நீங்கள் தான் ஐப்பன் என்பதற்கு எந்த வித ஆதாரமும் தாக்கல் செய்யாமல் சாட்சியம் அளித்திருப்பதால் உங்களது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.